**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**TROP.No. 26/2022**

PW2–செந்தில்குமார் நாள்.03.12.2025

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரம் எனக்கு தெரியும். வசந்தா என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள CCTV Camera உள்ளது என்பதை காட்ட நான் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வட்டி பணம் கொடுத்தற்கு எதிர்மனுதாரர்கள் ரசீது கொடுக்கவில்லை. ரசீது கொடுக்கவில்லை என்று வசந்தா கணவர் சொல்லி தான் எனக்கு விவரம் தெரியும். நான் கடன் ரூ.5லட்சம் எதுவும் வாங்கவில்லை. எந்த தேதிவரை எதிர்மனுதாரர் வட்டி வாங்க உரிமையுள்ளது என்றால் 2021ம் ஆண்டு வரை அவர் வட்டி வாங்க முடியும். வசந்தாவின் கணவர் எந்த தேதியில் ரசீது கேட்டார் என்றால் பத்திரத்தை ரத்து செய்ய போகும்போது கேட்டார். தேதி தெரியவில்லை. அது 2022ம் வருடம். நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள கடன் தொகையை திருப்பி செலுத்துவதற்கான காலம் சம்மந்தப்பட்ட விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அடமானபத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டது தவிர கடன் சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், வசந்தாவின் கணவர் சொன்னதின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.